# ப்ராம்ப்ட்டன் நகரின் குளிர்கால அதிசய உலகம் (Brampton Winter Wonderland) பற்றிய நிகழ்ச்சித்திட்டம் அமைத்தல், மற்றும் பல வசதிகள் பற்றிய புது தகவல்கள்

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 18, 2020) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது ஜனவரி 2, 2021 முதல், வானிலை சாதகமாக இருக்கும் பட்சத்தில், இடம் விட்டு இடம் செல்லும் பனிச்சறுக்கு விளையாட்டுக்களுக்கான களம் மற்றும் பாதைகளை திறந்துவிடவிருக்கிறது.

ஃப்ளவர் சிட்டி கம்யூனிட்டி கேம்பஸ் (Flower City Community Campus), வேல்லிப்ரூக் பார்க் [Valleybrook Park (செயற்கை ஐஸ் பைலட்(synthetic ice pilot))], மோர்ரிஸ் கெர்பல் பார்க் (Morris Kerbel Park), மற்றும் எர்ன்ஸ்க்ளிஃப் பார்க் (Earnscliffe Park) ஆகிய இடங்களில் இருக்கும் திறந்தவெளி பனிச்சறுக்கு மைதானங்களுக்கான பதிவு செய்தல் டிசம்பர் 21 ஆம் தேதி முதல் துவங்கும்.

பாப்-அப் நிகழ்ச்சித் திட்டமிடல், நடப்பதற்கான பாதை மற்றும் திறந்தவெளியில் நடைபெறும் கிளப்-களுக்கான தேதிகள் கிடைக்குமிடம்: www.brampton.ca/recreation .

**மவுண்ட் சிங்வாகவ்ஸி (Mount Chinguacousy)**

பனிமலைச்சறுக்கு, ஸ்னோபோர்டிங் (Snowboarding) மற்றும் டியூபிங் (Tubing)

பனிமலைச்சறுக்கு, ஸ்னோபோர்டிங் (Snowboarding) மற்றும் டியூபிங் (Tubing) ஆகியவற்றை செயல்படுத்த ப்ராம்ப்ட்டன்வாசிகளுக்கான முதல் இடம் மவுண்ட் சிங்வாகவ்ஸி ஆகும்; இது சிங்க்வாகவ்ஸி பார்க்-இல் அமைந்திருக்கிறது. இது காலநிலை சாதகமாக இருக்கும் பட்சத்தில், ஜனவரி 2, 2021 அன்று திறக்கப்படும்

ஒருமுறைக்கு மட்டும் பணம் செலுத்தி பனிமலைச்சறுக்கு, ஸ்னோபோர்டிங் (Snowboarding) மற்றும் டியூபிங் (Tubing) செய்வது முன்பதிவின் பேரில் கிடைக்கிறது. உடல்ரீதியான தூரத்தை பேணுவதற்காக, குறைவான எண்ணிக்கையிலானவர்களுக்கு மட்டுமே வசதி செய்யப்பட்டுள்ளது. பனிமலைச்சறுக்கு சாதனங்கள் மற்றும் ஸ்னோபோர்டிங் (Snowboarding) சாதனங்கள் தற்போதைக்கு வாடகைக்கு கொடுப்பது கிடையாது என்பதை நினைவில் கொள்ளவும்.

செயல்படும் நேரங்கள், திறந்து அல்லது மூடியிருக்கும் நிலை உள்ளிட்ட அனைத்து தகவல்களுக்கும் வருகை புரியவும்: www.brampton.ca/mountching.

இடம் விட்டு இடம் செல்லக்கூடிய பனிச்சறுக்கு மற்றும் ஸ்னோஷூயிங் வழித்தடங்கள்

இடம் விட்டு இடம் செல்லக்கூடிய பனிச்சறுக்கு மற்றும் ஸ்னோஷூயிங் வழித்தடங்கள் வானிலை சாதகமாக இருக்கும்பட்சத்தில் சிங்க்வாகவ்ஸியில் ஜனவரி மாதம் முதல் உபயோகத்திற்கு வரும். இந்த

பனிச்சறுக்குத் தடங்களை சாண்ட்ரா ஹேம்ஸ் சென்ட்டரில் இருக்கும் வாகன நிறுத்த மைதானத்தில் ப்ரமீலியா மற்றும் கூட்வுட் (Bramalea and Goodwood) நுழைவாயில் வழியாக அணுகலாம்; இது வாகனங்களை நிறுத்திவைப்பதற்கான இயல்பான நேரங்களில் குடியிருப்புவாசிகள் உபயோகித்துக் கொள்வதற்கென உத்தேசிக்கப்பட்டவையாகும். அறிவிப்பு பலகைகளில் இருக்கும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி உடல்ரீதியான தூரம் கடைப்பிடிக்கவும்.

பனிச்சறுக்குத் தடங்கள் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகப் பணியாளர்களால் பராமரிக்கப்படுகின்றன என்பதுடன், சாதகமற்ற வானிலைகளின் காரணமாக மூடப்படலாம். இப்போதைக்கு பனிச்சறுக்கு உபகரணங்கள் வாடகைக்கு கிடைக்காது.

செயல்படும் நேரங்கள், திறந்து அல்லது மூடியிருக்கும் நிலை உள்ளிட்ட அனைத்து தகவல்களுக்கும் வருகை புரியவும்: www.brampton.ca/winterwonderland.

வானிலை எச்சரிக்கைகள் மற்றும் மூடப்படுதல்

மிதமானதுமுதல் ஈரமானது வரையிலான நிலைமைகள் அல்லது கடுங்குளிர் (20 டிகிரி செல்ஷியஸ்-க்கும் குறைவான வெப்பநிலை) போன்ற சாதகமற்ற வானிலை காரணமாக மலைச்சரிவுகள் மற்றும் சறுக்குப்பாதைகள் மூடப்படலாம். குடியிருப்புவாசிகள் வருகை புரியும் முன்பே நிலைமை பற்றிய புதுத் தகவல்களை சரிபார்த்துக்கொள்ள வேண்டுகிறோம்.

**நான்கு புதிய திறந்தவெளி பனிச்சறுக்கு வளையங்கள்**

நகர நிர்வாகமானது, நான்கு புதிய திறந்தவெளி பனிச்சறுக்கு வளையங்களை, ஃப்ளவர் சிட்டி கம்யூனிட்டி கேம்பஸ் (Flower City Community Campus), வேல்லிப்ரூக் பார்க் (Valleybrook Park) (செயற்கை ஐஸ் பைலட்), மோர்ரிஸ் கெர்பல் பார்க் (Morris Kerbel Park), மற்றும் ஏர்ன்ஸ்க்ளிஃப் பார்க் (Earnscliffe Park) ஆகிய இடங்களில் நிறுவவிருக்கிறது.

அசலில், டிசம்பர் 18 ஆம் தேதியன்றே திறக்க இலக்கு வைத்திருந்தபோதிலும், சமீபத்திய மிதவெப்பமான வானிலையானது இந்த பனிச்சறுக்கு வளையங்களில் நீர் நிரப்பி அவை பனிக்கட்டியாக உறைய வைக்க கூடுதல் காலம் அளிப்பது அவசியம் ஆகிவிட்டது.

கோர் மெடோஸ் மூடப்பட்ட திறந்தவெளி ஸ்கேட்டிங் பனிச்சறுக்கு வளையம், சிங்வாகவ்ஸி பார்க் ஸ்கேட் ரிக்ரியெஷனல் பனிச்சறுக்குத்தடம், கேஜ் பார்க் அவுட்டோர் ரிக்ரியெஷனல் பனிச்சறுக்குத்தடம், மவுண்ட் ப்ளெசண்ட் அவுட் டோர் ஸ்கேட்டிங் வளையம் ஆகியவை டிசம்பர் 10 ஆம் தேதி திறக்கப்பட்டன.

செயல்படும் நேரங்கள், திறந்து அல்லது மூடியிருக்கும் நிலை உள்ளிட்ட அனைத்து தகவல்களுக்கும் வருகை புரியவும்: www.brampton.ca/outdoorskating.

**நடைப்பயிற்சிப்பாதை, திறந்தவெளி  ரன் கிளப் மற்றும் பாப்-அப் நிகழ்ச்சி திட்டமிடல்**

ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கிற்கான பணியாளர்கள் டிசம்பர் 19 ஆம் தேதி துவங்கி நடைப்பயிற்சிப்பாதை, திறந்தவெளி ரன் கிளப் நிகழ்ச்சிகளை வழங்குவார்கள். குளிர்ப்பருவ மாதங்களில், குடியிருப்புவாசிகள் இந்த திறந்தவெளி செயல்பாடுகளைக் கண்டு ரசித்து மகிழலாம், அதே சமயத்தில் உடல்ரீதியான தூரத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.

நடைப்பயிற்சிப் பாதை நிகழ்ச்சித் திட்டமானது அனைத்து வயதினருக்குமானது என்பதோடு, குடும்பத்தினருக்கென்றே, கச்சிதமாக அமைந்த ஒரு செயல்பாடாகும். குடியிருப்புவாசிகள் ப்ராம்ப்ட்டன் நகரின் 'ஸ்டன்னிங் வால்க்ஸ்'-ஐ குளிர்காலத்தின் பல்வேறு தேதிகளில் ரசித்து மகிழலாம், மேலும் குறிப்பிட்ட கருத்தின் பேரிலான நடைப்பயணங்களையும் செய்யலாம். குழந்தைகளுடன் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் வர வேண்டும்.

அவுட்டோர் ரன் கிளப் –ற்காக குடியிருப்புவாசிகள் பதிவு செய்துகொண்டு வெளியில் சென்று சுறுசுறுப்பாக இருக்கலாம். இந்த நிகழ்ச்சியானது, விளையாட்டுக்கு புதியவர்கள் என்பவர்கள்  உள்ளிட்ட அனைத்து நிலையில் இருப்பவர்களின்  செயல்பாடுகளுக்கும் உகந்தது.

நிகழ்ச்சியின் தேதிகள், அவற்றின்நேரம், நிகழிடங்கள் மற்றும் பதிவு பற்றிய தகவல்களை இங்கு காணலாம்: www.brampton.ca/winterwonderland.

பாப்-அப் (அட்டையில் உருவங்கள் செய்தல்) நிகழ்ச்சி நடத்துதல்

குடும்பத்தினரை ஒன்றாக சேர்த்தி, கோட்டை கட்டுதல், பனிச்சிற்பம் செய்தல்  போன்ற பாப்-அப் நிகழ்ச்சிகளில் எங்களுடன் சேர்ந்து கொள்ளுங்கள்.

பாப்-அப் நிகழ்ச்சிகள் இரண்டு நாட்களுக்கு முன்பாகவே ஆன்லைனிலும் ப்ராம்ப்ட்டன் நகர சமூக ஊடகங்களிலும் அறிவிப்பு செய்யப்படும்.

பாப்-அப் க்கு பதிவு செய்வதற்கான விபரங்கள் மற்றும் இடங்களை இங்கு காணுங்கள்: www.brampton.ca/winterwonderland.

**சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் & உங்கள் வருகைக்கு பதிவு செய்தல்**

குறிப்பாக கோவிட்-19 தொற்று பரவல் காலத்தில் சமுதாயத்தின் சுகாதாரமும் பாதுகாப்புமே முன்னுரிமை கொண்ட விஷயமாகும். பீல் ப்ப்ளிக் சுகாதார அமைப்பின் பரிந்துரைகளுக்கு ஏற்ப, அனைத்து திறந்தவெளி குளிர்கால நிகழ்ச்சிகள் மற்றும் நமது அனைத்து பனிசறுக்கு வளையங்கள் மற்றும் மவுண்ட் சிங்க்வாகவ்ஸி ஆகிய இடங்களுக்கு வருகை புரிய முன்பதிவு செய்துகொள்ளும் கட்டமைப்பு உள்ளது. கூட்டம் கூடும் நபர்களுக்கான கொள்திறன் தேவைகளை நிறைவேற்றவும், தொற்று பரவல் ஏற்பட்டால் அதற்கான தடம் அறிவதை சாத்தியமாக்குவதற்குமே இந்த ஏற்பாடாகும்

திறந்தவெளி ஸ்கேட்டிங்

திறந்தவெளி ஸ்கேட்டிங்-ற்கான முன்பதிவு செய்தல், நிகழ்ச்சிக்கு 36 மணி நேரம் முன்பாக செய்துகொள்ளலாம்.குடியிருப்புவாசிகள் தங்களுக்கான இடம்/நேரத்தை இவற்றின் மூலம் செய்துகொள்ளலாம்:

- ஆன்லைனில் பதிவு செய்வதற்கு: cityofbrampton.perfectmind.com
- பதிவுசெய்வதற்கு இந்த எண்ணை அழைக்கலாம்: 905.791.2240
- நகர எல்லைக்குள்ளாக என்றால் Service Brampton ஐ 311 என்ற எண்ணில் அழைக்கவும்

அனைத்து முன்பதிவுகளும் ஒரு மணி நேர கால அவகாசத்திற்கு மட்டுமே. பெற்றோர், பாதுகாவலர்கள் அல்லது ஸ்கேட்டர்களுடன் வருகிற மற்றவர்கள் உட்பட அனைத்து அதரவாளர்களுக்கும் இட முன்பதிவு தேவை. குடியிருப்பாளர்கள் தாங்கள் வந்தவுடன்  ஆன்சைட் வரவேற்பு கூடாரத்தில் ஊழியர்களிடம் சரிபார்த்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உங்கள் முன்பதிவை ரத்து செய்ய அவசியமானால், 905.791.2240 ஐ அழைக்கவும்.

கழிப்பறை வசதிகளும் கிடைக்கின்றன. வரிசையில் நிற்கும்போதும், கழிப்பறைகளுக்குள்ளும் முக கவசங்கள் அவசியமாகும். பனிச்சறுக்கு வளையத்திற்குள்  உணவு அல்லது பானங்கள் அனுமதிக்கப்படமட்டாது.

மவுண்ட் சிங்வாகவ்ஸி

மவுண்ட் சிங்க்வாகவ்ஸி-க்கான முன்பதிவு செய்தல் 48 மணி நேரம் முன்னதாகவே செய்யப்படும். இதனை இவ்வாறு செய்துகொள்ளலாம்:

- ஆன்லைனில் பதிவு செய்வதற்கு: cityofbrampton.perfectmind.com
- பதிவுசெய்வதற்கு இந்த எண்ணை அழைக்கலாம்: 905.458.6555
- நகர எல்லைக்குள்ளாக என்றால் Service Brampton ஐ 311 என்ற எண்ணில் அழைக்கவும்

குடியிருப்பாளர்கள் தாங்கள் வந்தவுடன்  பனிச்சறுக்கு மலைச்சரிவில் இருக்கும் ஊழியர்களிடம் சரிபார்த்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உங்கள் முன்பதிவை ரத்து செய்ய அவசியமானால், 905.458.6555 ஐ அழைக்கவும். கழிப்பறை வசதிகளும் கிடைக்கின்றன. வரிசையில் நிற்கும்போதும், கழிப்பறைகளுக்குள்ளும் முக கவசங்கள் அவசியமாகும்.

திறந்தவெளி நிகழ்ச்சி திட்டமிடல்

நடைப்பயிற்சி பாதைகள், திறந்தவெளி ரன் கிளப் மற்றும் பாப்-அப் நிகழ்ச்சி திட்டமிடல் ஆகியவற்றுக்கு 48 மணி நேரம் முன்பாகவே முன்பதிவு செய்துகொள்ளலாம். குடியிருப்புவாசிகள் தங்களுக்கான இடத்தை இவ்வாறு முன்பதிவு செய்துகொள்ளலாம்:

- ஆன்லைனில் பதிவு செய்வதற்கு: cityofbrampton.perfectmind.com
- நகர எல்லைக்குள்ளாக என்றால் Service Brampton ஐ 311 என்ற எண்ணில் அழைக்கவும்

குடியிருப்பாளர்கள் தாங்கள் வந்தவுடன்  நிகழ்ச்சி நடக்கும் இடத்தில் இருக்கும் ஊழியர்களிடம் சரிபார்த்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காலநிலை பற்றிய அறிவிப்புக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நிறுத்தப்படுதல்

மோசமான வானிலை காரணமாக திறந்தவெளி வசதியமைப்புக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நிறுத்தப்படுதல். தங்கள் வருகைக்கு முன்பாகவே திறந்தவெளி பனிச்சறுக்கு வளையங்கள் மற்றும் சிங்வாகவ்ஸி ஆகியவை திறந்துள்ளனவா அல்லது மூடப்பட்டதா என தயவு செய்து ஆன்லைனில் சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர்,ஊடகம்& சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca